# OS.No.131/2023, Dated 27.02.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 27th day of February 2026.

**வா.சா.1 – சரஸ்வதி க/பெ.கணேசன் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது சொந்த ஊர் செய்யார் டவுன் ஆகும். நான் வா.சா.ஆ.2 கிரைய ஆவணப்படி செல்வராஜ், பிரேமா, கீதா ஆகியோரிடம் கிரையம் வாங்குவதற்கு முன்பாக தாவா சொத்து உள்ள கிராமத்தில் வேறு எந்த சொத்தும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எப்போது சென்று பார்த்தேன் என்றால் தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் போடப்பட்டதற்கு ஒரு வாரம் முன்பு சென்று பார்த்தேன். செல்வராஜ் என்பவர் தான் தாவா சொத்தை என்னிடம் காட்டினார். சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை செல்வராஜ், பிரேமா மற்றும் கீதா ஆகியோர் கொடுத்தார்கள். தாவா சொத்தை பார்வையிட்ட போது அந்த ஆவணங்களை என்னிடம் அவர்கள் கொடுக்கவில்லை. தாவா சொத்தை பார்வையிட்டு இரண்டு, மூன்று நாட்கள் கழித்து தான் மூல பத்திரங்களை நான் படித்து பார்த்தேன். தாவா செத்தை செல்வராஜ் மற்றும் கோபியிடம் விலை பேசினேன். விலை பேசும்போது, ஏழுமலை, கார்த்திக் மற்றும் மனோகரன் ஆகியோர் அங்கு இருந்தனர். தாவா சொத்தை விலை பேசிய தேதி எனக்கு ஞாபகம் இல்லை. 23.08.2020 அன்று கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. தாவா சொத்தின் உரிமையாளர்கள் யார் என்ற விபரம் மூலபத்திரத்தை படித்து பார்த்த அன்றே எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனவே செல்வராஜ், பிரேமா, கோபி மற்றும் கீதா ஆகியோர் தான் சொத்தின் உரிமையாளர்கள் என்ற விபரம் அன்றைய தினமே எனக்கு தெரியும் என்றால் சரிதான். மூல ஆவணங்களை படித்து பார்த்த பின்னிட்டு சுமார் 4, 5 நாட்கள் கழித்து வந்தவாசியில் வைத்து கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினோம். ஒப்பந்தம் போட்ட அன்று தான் செண்டிற்கான விலையை நிர்ணயம் செய்தோம். விலை நிர்ணயம் செய்தபோது கோபி, செல்வராஜ் மற்றும் கீதாவின் கணவர் ஆகியோர் அங்கு இருந்தார்கள். செண்டு ரூ.5000/- என்று விலை பேசப்பட்டது. எவ்வளவு ஏக்கர் விலை பேசப்பட்டது என்றல் 2 ஏக்கருக்கு மேல் விஸ்தீரனத்திற்கு விலை பேசப்பட்டது. மொத்தமாக மேற்படி சொத்திற்கு எவ்வளவு விலை பேசினோம் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பந்தத்தில் மொத்த விஸ்தீரனம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சர்வே எண் தான் சொல்லப்பட்டிருந்தது. விஸ்தீரனம் சொல்லப்படவில்லை. ஒரு சொத்தை விற்க வேண்டுமென்றால் அதன் உரிமையாளர்கள் அனைவரும் கையெழுத்திட வேண்டுமென்ற விபரம் எனக்கு தெரியும். கிரைய ஒப்பந்தம் போடப்பட்டபோது கிரைய தொகை முழுவதும் என்னிடம் இல்லை. அதன் பின்னிட்டு ஒருவாரம் கழித்து தான் நான்

ஏற்பாடு செய்தேன். நான் முன் பணம் போக ரூ.15,00,000/—த்தை ஏற்பாடு செய்தேன். விலை பேசிய அன்று எவ்வளவு விஸ்தீரனத்திற்கு எவ்வளவு கிரைய தொகையை நான் தயார் செய்ய வேண்டுமென்று நான் கணக்கிட்டேனா என்றால் சுமாராக ரூ.12,00,000/—ம் சுமாராக 2 ஏக்கருக்கு மேல் விஸ்தீரனத்திற்கு தயார் செய்ய வேண்டுமென்று கணக்கிட்டேன். மேற்படி விபரங்களை கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டேனா என்றால் முன் பணம் மட்டும் தான் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளோம். மொத்த விலை குறிப்பிடவில்லை. முன்பண தொகையை கோபி மற்றும் செல்வராஜிடம் கொடுத்தேன். முன்பண தொகை யாரிடம் கொடுத்தேன் என்று கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடவில்லை. செல்வராஜ், கீதா மற்றும் பிரேமாவிடம் கிரைய பத்திரத்தை எந்த தேதியில் எழுதி பதிவு செய்தேன் என்றால் 21.09.2020 அன்று பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் தான் நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். அந்த பத்திரப்படி 1 ஏக்கர் 25 செண்டு வாங்கியுள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் சட்டபடி முறையாக எழுதப்பட்ட ஆவணம் தான் அதில் உள்ள சங்கதிகள் உண்மையானவை தான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.27 18:40:18 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி